செ.வெ.எண் : 33/மார்ச் நாள்:27.03.2020

# இராமநாதபுரம் மாவட்டம்

## இராமநாதபுரம் நகராட்சியில் புதிய பேருந்து நிலைய வளாகம், இராஜா மேல்நிலைப்பள்ளி மைதானம் ஆகிய இரு இடங்களில் மட்டுமே காய்கறிகள், பழக்கடைகள் நடத்த அனுமதி மாவட்ட ஆட்சித் தலைவர் திரு.கொ.வீர ராகவ ராவ்,இ.ஆ.ப., அவர்கள் தகவல்.

இராமநாதபுரம், நகராட்சிப் பகுதியில் தீயணைப்பு மற்றும் மீட்பு பணிகள் துறை மூலம் மேற்கொள்ளப்படும் கொரோனா வைரஸ் தடுப்பு முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை மாவட்ட ஆட்சித் தலைவர் திரு.கொ.வீர ராகவ ராவ்,இ.ஆ.ப., அவர்கள் இன்று (27.03.2020) நேரில் சென்று பார்வையிட்டார்.

அந்த ஆய்வின்போது மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் கூறியதாவது:

இராமநாதபுரம் மாவட்டத்தில் கொரோனா வைரஸ் பரவாமல் தடுப்பதற்கான முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் தொடர்ந்து தீவிரமாக மேற்கொள்ளப்பட்டு வருகிறது. பொதுமக்கள் கூட்டமாகக் கூடுவதை தவிர்த்திட முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக மாவட்டத்தில் 144 தடை உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது. பொது மக்களுக்கு அத்தியாவசிய தேவையான பால், உணவுப் பொருட்கள், காய்கறிகள், மருந்து பொருட்கள் சிரமமின்றி கிடைக்க உரிய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. அத்தியாவசிய பொருட்கள் தொடர்பான கடைகளில் பொருட்கள் வாங்கும்போது ஒரு மீட்டர் இடைவெளியில் நின்று பொருட்கள் வாங்கிச் செல்ல பொதுமக்களுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது. வெளிநாடுகளில் இருந்து இராமநாதபுரம் மாவட்டத்திற்கு திரும்பிய 4,125 நபர்கள் அவரவர் குடும்பத்தாருடன் வீடுகளில் தனிமைப்படுத்தப்பட்டு கண்காணிக்கப்பட்டு வருகின்றது. அவர்களின் வீடுகளில் மாவட்ட நிர்வாகம் மூலம் ஸ்டிக்கர் ஒட்டி அடையாளப்படுத்தப்பட்டுள்ளது. மாவட்டத்தில் இதுவரை யாருக்கும் கொரோனா வைரஸ் பாதிப்பு உறுதி செய்யப்படவில்லை. தனிமைப்படுத்தப்பட்டுள்ளோர் வீட்டிலிருந்து வெளியே செல்லாமலிருக்க காவல், சுகாதாரம், வருவாய் துறை அலுவலர்கள் கண்காணித்து வருகின்றனர்.

மேலும், நோய் தொற்றை முற்றிலுமாக தவிர்த்திடும் வகையில் முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக நகரின் முக்கிய வீதிகள், பொது இடங்களில் 10 தீயணைப்பு வாகனங்கள் மூலம் தண்ணீரில் கலந்த கிருமி நாசினி ஒரு நாளைக்கு இரு முறை தெளிக்கப்பட்டு சுகாதாரம் காக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. மேலும், இராமநாதபுரம் நகராட்சி பகுதியில் அத்தியாவசிய பொருட்கள் கடைகளில் பொதுமக்கள் கூட்டமாகக் கூடுவதை தவிர்த்திட இராமநாதபுரம் புதிய பேருந்து நிலைய வளாகம், ராஜா மேல்நிலைப்பள்ளி மைதானம் ஆகிய இரண்டு இடங்களில் காய்கறி, பழங்கள் விற்பனைக் கடைகளை ஒருங்கிணைத்து அமைப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. நாளை (28.03.2020) முதல் இராமநாதபுரம் நகரில் உள்ள பொதுமக்கள் மேற்குறிப்பிட்டுள்ள இரண்டு இடங்களில் மட்டுமே காய்கறிகள் மற்றும் பழங்களை வாங்க முடியும். இவ்விரு இடங்கள் தவிர்த்து பிற இடங்களில் காய்கறிகள், பழங்கள் விற்கும் நபர்கள் மீது கடுமையான நடவடிக்கை எடுக்கப்படும். இதேபோல மாவட்டத்தின் பிற பகுதிகளிலும் தேவைக்கேற்ப பொது இடங்கள் தேர்வு செய்யப்பட்டு காய்கறி, பழக்கடைகளை அமைப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது என தெரிவித்தார்.

தொடர்ந்து, மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் கீழக்கரை நகராட்சிப் பகுதியில் கொரோனா வைரஸ் முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் தொடர்பாக நேரில் சென்று ஆய்வு செய்தார். இந்த ஆய்வுகளின் போது இராமநாதபுரம் நகராட்சி சாலைத்தெரு பகுதி மற்றும் கீழக்கரை நகராட்சி பகுதியில் போதிய சமூக இடைவெளி இல்லாமல் பொதுமக்கள் கூட்டமாகக் கூடும் வகையில் செயல்பட்ட இரண்டு மருந்தகங்களுக்கு சீல் வைத்திட மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் உத்தரவிட்டார்.

இந்த நிகழ்வின்போது, இராமநாதபுரம் சார் ஆட்சியர் டாக்டர் என்.ஓ.சுகபுத்ரா,இ.ஆ.ப., மாவட்ட தீயணைப்பு மற்றும் மீட்பு பணிகள் அலுவலர் திரு.அ.சாமிராஜ், இராமநாதபுரம் நகராட்சி ஆணையாளர் திரு.விஸ்வநாதன் உட்பட அரசு அலுவலர்கள் பலர் உடனிருந்தனர்.

**வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், இராமநாதபுரம்.**